என்று அனைத்து வகையிலும் மிகப் பெரிய பாதிப்பைத் தமிழகம் சந்தித்து வருகிறது. தினசரி, அறிவிக்கப்பட்ட மின் வெட்டாக மூன்று மணி நேரமும், அறிவிக்கப்படாத மின் வெட்டாக ஒரு மணி நேரத்திற்கு மேலாகவும், சுமார் 2,500 மெகா வாட் அளவுக்கு மின் வெட்டு ஏற்படுகிறது.

மின் தேவை அதிகரித்துள்ள நிலையில், அரசு தொலைநோக்குப் பார்வையோடு 2000 ஆம் ஆண்டிற்கு முன்னரே, இந்த உற்பத்தித் திறனுடன் கூடுதலாக உற்பத்தியைத் தொடங்கியிருக்க வேண்டும். 2006-2007-ல் 50 சதவிகிதம் மின்சாரத் தேவை அதிகரித்துள்ள நிலையில், மின் உற்பத்தியைத் தொடங்காமல், தனியார் மின்சார உற்பத்தி நிலையத்திலும், அண்டை மாநிலங்களிலும் அதிக விலை கொடுத்து மின்சாரத்தை வாங்குவதில் அரசு ஆர்வம் காட்டுவதாகத் தெரிகிறது

மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மின் கட்டணத்தை உயர்த்துவதைப் பற்றியும், விவசாயிகளுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரத்தை இரத்துச் செய்வது குறித்தும் கருத்துக் கேட்டு வருகிறது. எல்லா இடங்களிலும் விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்கள். எனவே, மின் கட்டணத்தை உயர்த்துவது, விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை நிறுத்துவது போன்ற நோக்கத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சி எதிர்க்கிறது என்பதை இந்த மாமன்றத்தில் பதிய வைக்கின்றேன். மின்சார வாரியத்தின் கட்டுப்பாட்டில் 17 மெகா வாட் மட்டுமே காற்றாலைமூலமாக உற்பத்தி செய்யப்படுகிறது. 4,892 மெகா வாட் தனியார் காற்றாலை நிறுவனங்களிலிருந்து. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமதி பத்மாவதி அவர்கள், மின் கட்டணத்தை உயர்த்தப் போவதாகவும், இலவச மின்சாரத்தை நிறுத்தப் போவதாகவும் ஒரு செய்தியைச் சொன்னார்கள். இது முழுவதும் கற்பனை. மின் கட்டணத்தை உயர்த்தப் போவதுமில்லை, இலவச மின்சாரத்தை நிறுத்தப் போவதுமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இதையெல்லாம் நிறுத்தினால் போராடலாம் என்ற அவர்களின் கனவு பலிக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)